# பொன்னேரி நகராட்சி

## நகர்மன்ற அவசரக்கூட்டம்

பொன்னேரி நகராட்சியின் நகர்மன்ற அவசரக்கூட்டம் நகர்மன்றத்தலைவர் திருமதி. கே. பரிமளம் விஸ்வநாதன் அவர்களின் தலைமையில் 2022 ஆம் ஆண்டு மே மாதம் 23.05.2022 திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு நகர்மன்றக்கூடத்தில் நகர்மன்ற தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் .

பொருள் எண் 1

அரசு ஆணை எண்.52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022–ன் படியும் மற்றும் இந்நகர மன்ற தீர்மானம் எண்.24, நாள்.11.04.2022–ன் படியும் பொன்னேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் 01.04.2022–ம் தேதி முதல் சொத்துவரி/ காலிமனைவரி பொது சீராய்வு செய்ய மண்டல அடிப்படை மதிப்பு மற்றும் உயர்வு செய்வதற்கான காரணிகளுடன் விவரங்களை பொன்னேரி நகராட்சி அறிவிப்பு பலகையில் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், இது குறித்த விளம்பரம் 14.04.2022 தேதிய தினத்தந்தி, தீக்கதிர் மற்றும் டெக்கான் காணிகல் ஆகிய நாளிதழ்களில் விளம்பரம் அறிவிப்பு வெளியிடப்பட்டு ஆட்சேபணை ஏதேனும் இருப்பின் 30 தினங்களுக்குள் இந்நகராட்சிக்கு எழுத்து பூர்வமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ அளிக்க அறிக்கை வெளியிடப்பட்டது. அறிக்கை வெளியிட்டு 30 தினங்களுக்குள் பொதுமக்களிடமிருந்து ஆட்சேபனை மற்றும் ஆலோசனைகள் ஏதும் வரவில்லை என்பதனை மன்றத்தில் பதிவு செய்யப்படுகிறது. எனவே, சொத்துவரி/ காலிமனைவரி பொது சீராய்வு மதிப்பினை ஊர்ஜிதம் செய்யவும் இது குறித்தான விளம்பர அறிக்கையினை மாவட்ட அரசிதழில் வெளியிடவும் விளம்பரம் செலவீனத்திற்கும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1.மன்றம் பதிவு செய்யலாம்.

2. விளம்பரம் அறிக்கையினை மாவட்ட அரசிதழில் வெளியிடவும் பொது நிதியில் செலவீனம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.
(ந.க.எண்.244/2022/அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 38 நாள்: 23.05.2022

தீர்மானம்:: பதிவு செய்யப்பட்டது.

பொருள் எண் 2

பொன்னேரி நகராட்சியில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு ஆதார் சேவை மையம் அமைத்திட உரிய இடவசதி செய்து தருமாறு Elcot நிறுவனம் மூலம் கடிதம் வரப்பெற்றுள்ளது. பொதுமக்களின் நலன்கருதி ஆதார் சேவை மையம் அமைத்திட வள்ளலார் தெரு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அருகில் உள்ள அறையினை சேவை மையமாக பயன்படுத்திடவும், அறையின் பராமரிப்பு மின்வசதி மற்றும் கதவுகள் அமைத்துதர ரூ.30,000/- மதிப்பீட்டில் தோராய செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
   (ந.க.எண். 307/2022/அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 39 நாள்: 23.05.2022

**தீர்மானம்:: ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

பொருள் எண் 3

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி நகராட்சியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் . 492 நாள் 19.09.2013 மற்றும் அரசாணை எண் 500 நாள் 29.12.2016 ன்படி பாதாள சாக்கடை பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி திட்டத்தில் மொத்தமுள்ள 27 வார்டுகளில் 22 வார்டுகளில் மட்டும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த 14 வார்டுகளுக்குட்பட்ட கீழ்க்காணும் சாலைகள் பாதாள சாக்கடை திட்ட பணியிலிருந்து விடுபட்டுள்ளது. இதுதொடர்பாக பொதுமக்கள், மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து விடுபட்டுள்ள தெருக்களில் பாதாள சாக்கடை பணிகளை மேற்கொள்ள கோரிக்கைகள் வந்தவண்ணம் உள்ளது.

எனவே கீழ்க்காணும் விடுபட்டுள்ள தெருக்களில் பாதாள சாக்கடை பணிகளை மேற்கொள்ள நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் , திருவள்ளூர் அவர்களுக்கு வரைவு அனுப்பிவைக்க மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எ | தெருவின் பெயர் |
|---|---|
| 1 | மதினா பள்ளிவாசல் 3வது தெரு 2வது குறுக்கு தெரு |
| 2 | கன்னையா நகர் |
| 3 | பாலன் நகர் |
| 4 | பி.ஆர்.கே. நகர், |
| 5 | உதயம் நகர், |
| 6 | பி. ஆர்.கே நகர் விரிவாக்கம், |
| 7 | கண்ணதாசன் தெரு |
| 8 | ஓம் சாய்டவுன்ஷிப், |
| 9 | மூகாம்பிகை நகர் விரிவாக்கம் |

| | |
|---|---|
| 10 | மூகாம்பிகை நகர் 2வது குறுக்கு தெரு |
| 11 | ஆனந்தி நகர் |
| 12 | ஸ்ரீ சாய்கிருபா நகர், |
| 13 | ராம் நகர் |
| 14 | கள்ளுக்கடைமேடு குறுக்கு தெரு |
| 15 | ஜெயம் நகர் |
| 16 | ஆதித்யா கார்டன் |
| 17 | போலிஸ்லைன் பின்புறம் |
| 18 | ஜெயம் விஜபி சிட்டி |
| 19 | சிவன்கோயில் தெரு ( பகுதி ) |
| 20 | சிவன்கோயில் குளக்கரை |
| 21 | அரிஅரன் பஜார் ( ஆதம் சாகிப் தெரு ) |
| 22 | அரிஅரன் பஜார் குறுக்கு தெரு |
| 23 | வள்ளலார் தெரு ( பகுதி ) |
| 24 | போலிஸ்லைன் 1வது தெரு |
| 25 | ராஜம் நகர் |
| 26 | தேவத்தம்மன் கோயில் பின்புறம் |
| 27 | எம்.ஜி.ஆர் நகர் ( 1 Manhole ) |
| 28 | துர்கா நகர் |
| 29 | கண்ணதாசன் தெரு |
| 30 | நக்கீரன் குறுக்கு தெருக்கள் |
| 31 | நி யூ சன் சிட்டி |
| 32 | வேண்பாக்கம் பள்ளம் குறுக்கு தெரு |

அலுவலக குறிப்பு:

1. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் விடுபட்ட தெருக்களில் பாதாள சாக்கடை பணிகளை மேற்கொள்ள மதிப்பீடு கோர மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
(ந.க.எண். 505/2011/அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 40 நாள்: 23.05.2022

**தீர்மானம்:: ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

ஒம்) கி. பரிமளம் விசுவநாதன்
நகர்மன்ற தலைவர்,
பொன்னேரி நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையர்,
பொன்னேரி நகராட்சி,
திருவள்ளூர் மாவட்டம்.